களை அமைப்பது என்பது சமீபத்தில் இயலாத ஒன்று. அப்படியே ஒரு வேளை தொழிற்சாலைகளை அமைத்தாலும் மரங்களாக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம். ஆகவே இது விரிவாக பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9. 10]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய சந்தன மரத்தில் மைசூரிலிருந்து கிடைக்கூடிய சந்தன மரத்தை விட ஆயில் சத்து குறைவு என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே' அதுபற்றிய தகவல் அரசிடம் இல்லை.

திருமங்கலம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண் 34—திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் நகராட்சிக்கு வைகை ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திருமங்கலம் நகராட்சி மறறும் வழித்தட கிராமங்களாகிய (1) முள்ளிப்பள்ளம், (2) தென்கரை, (3) மேலக்கால் மற்றும் (4) கோக்குளம் ஆகியவைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூபாய் 62.49 லட்சத்தில் திட்டம் அமைக்கவும் மேற்கண்ட திட்டத்தை வருடத்திற்கு ரூபாய் 1.524 லட்சத்தில் பராமரிக்கவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட நகராட்சிக்கும், ஊராட்சிகளுக்கும் திட்டம் பற்றிய விவரங்களைத் தெரிவித்து ஊராட்சிகளின் தீர்மானம் கோரப்பட்டது. திருமங்கலம் நகராட்சி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மற்ற ஊராட்சிகளிலிருந்து தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் நகராட்சி ஆய்வாளர் அவர்களை இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது

1980 ஜூலை 22]

மேற்கண்ட விபரங்கள் கிடைத்த பின்பு வாரியத்தின் ஒப்புதலுடன் அரசின் ஒப்புதலும் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகரம் காசி—கன்னியாகுமரி நெடுஞ்சாலையிலே இருக்கின்ற வளர்ந்து வருகின்ற ஒரு நகரமுமாகும். அங்கே குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அங்கே கிடைக்கின்ற தண்ணீரில் கால்சியம் கன்டென்ட் அதிகமாக இருக்கின்றது. ஆகவே நிதிநிலைமை சரியாக இல்லாத நிலைமை இருந்தாலும் கூட அதன் காரணத்தால் காலதாமதம் செய்யாமல் விரைந்து செயல்படுத்தி அம்மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் அரசு முனைப்பாக செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி ஆய்வாளர் அவர்களிடம் இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது. அந்த விபரத்தைப் பெற்று மற்ற பிரச்சினையும் பரிசீலனை செய்த பிறகுதான் இத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து எந்த அளவுக்கு சாத்தியக்கூறு என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. என்.எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1964லிருந்து பரிசீலனையில் இருந்து காலதாமதம் ஆகிக் கொண்டு வருகின்றது. எனவே, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மற்ற குறைபாடுகள் இருந்தாலும் கூட விரைவாக இந்த ஆண்டே இத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருமங்கலம் நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் இருந்து வரக்கூடிய பதிலைப் பொறுத்துத்தான் அரசினுடைய முடிவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்பியாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம்.

*வினா எண் 35— திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள நம்பியாற்றின் குறுக்கே மூவாற்றங்கரை என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?